# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2105/40 - 2019 ජනවාරි මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.01.10
*2105/40 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MN/DS/L/D1/AQ/WPP/14.
காணி அமைச்சின் இல.: 4-3/2/2017/CEB/251.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில், மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 54, துள்ளுகுடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில், நடுக்குடா எனப்படும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2018.12.20 ஆந் திகதி வரையப்பட்ட வரைபட இல. MN 780 இல் தொகுதி 01, எனக் காட்டப்பட்டுள்ளதும், மொத்தமாக 3.0266 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடைய கூழைஇழந்தை எனக்குறிப்பிடப்படும் காணித் துண்டின் விபரம் :

**வரைபட இல.** MN 780

*01.* **துண்டு இல. *1***
காணியின் பெயர் : குழைஇழந்தை ; விபரம் : வெற்றுக் காணி ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : - ; விஸ்தீரணம்: 3.0266 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மன்னார் நகர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க. சிவசம்பு,
பிரதேச செயலாளர்,
மன்னார் நகரம்.

பிரதேச செயலகம்,
மன்னார் நகரம்,
2019, சனவரி 07.

1 - 636



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*